பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

டர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 11 வியாழக்கிழமை (23-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 147

## புரிந்துணர்வின்மையே பிரச்சினைக்குக் காரணம்

# எதிர்ப்புக்களின் மத்தியிலும் சமரச முயற்சிக்கு வந்தோம்

## யாழ். வந்த பிக்குகள் தூதுக்குழு சார்பில் அமைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

நாம் யாழ்ப்பாணம் வருவதற்கு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புகள் இருந்தன.

எனினும் சிங்கள, தமிழ் இனங்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதற்காக நாம் சமரச முயற்சியை மேற்கொண்டு இங்கு வந்துள்ளோம்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பௌத்த குருமார் தூதுக் குழுவின் சார்பில் அதன் அமைப்பாளர் வண. பண்டித மாதம்பகம அஸாஜி தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இரு தரப்பினர் மத்தியிலும் சரியான தொடர்புகளும் பரஸ்பரம் புரிந்துணர்வும் இல்லாததாலேயே இனப்பிரச்சினை இந்தளவுக்குச் சிக்கலாகியுள்ளது.

இதனைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்தால் நாட்டில் சுபீட்சம் ஏற்படும். மக்கள் நிம்மதியாக வாழ முடியும். அதனைக் கருதியே நாம் பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் இங்கு வந்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் நான்கு நாட்களிலும் நாம் அந்த இலக்கை முன் வைத்தே எமது பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் — என்று வண. அஸாஜி தேரர் தெரிவித்தார்.

பௌத்த மதகுருமாரை வரவேற்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாவது:-

## அரசு நல்ல சூழ்நிலையை பயன்படுத்த வேண்டும் - பாலசிங்கம்

விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளுக்குக் கதவைத் திறந்து வைத்துள்ளது. அரசாங்கம் இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்— என்றார்.

தமிழ் மக்களின் நிலைமை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள பௌத்த குருமாருக்கும் விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கும் இடையில் முதல்கட்டப் பேச்சுக்கள் இன்று வியாழன் காலை இடம்பெறவிருக்கின்றன.

இந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா [மாத்தயா], அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (இ-3)

## கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதியைச் சந்திப்பர்

கொழும்பு, ஏப். 23

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள பௌத்த மதக்குழுவினர் கொழும்பு திரும்பியதும் இம்மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்திக்கவிருக்கின்றனர்.

இப்படி இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

தமது யாழ்ப்பாண விஜயம் பற்றி பௌத்த குழுவினர் அச்சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் எடுத்து விளக்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## சுபாஸ் ஹோட்டல் பகுதியில் நேற்று பலத்த பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

பௌத்த குருமார் தங்கியுள்ள சுபாஸ் ஹோட்டல் பகுதியில் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

சுபாஸ் ஹோட்டல் அமைந்துள்ள விக்டோரியா வீதி போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் போராளிகள் நவீன ஆயுதங்கள் சகிதம் அந்தப் பகுதியில் கடமையில் இருந்தனர்.

தமிழீழ காவல் துறையினர் போக்குவரத்து பணியில் ஈடு பட்டனர். (இ-3)

## முச்சந்தி முரளி



அகதிகள் எண்டதால அவைக்கு அக்கறை இல்லை போல...!

## பௌத்த தூதுக்குழுவினரை புலிகள் வரவேற்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 23

நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பௌத்த மதகுருமார் தூதுக்குழுவினரை விடுதலைப் புலிகள் நேற்று மாலை ஐந்து மணியளவில் நகரில் வரவேற்றனர்.

பலாலி விமான நிலையத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் அழைத்து வரப்பட்ட பௌத்த தூதுக் குழுவினருக்கு சேந்தாங்குளத்தில் இருந்து புலிகளின் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கி அவர்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பௌத்த தூதுக் குழுவில் இடம் பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 23

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பௌத்த தூதுக் குழுவில் 10 பௌத்த குருமாரும் இரண்டு உதவியாளர்களும் அடங்கி உள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

★ அமரபுர நிக்காய வண. பலப்பிட்டிய சிறிசிட்டாதிய மகாநாயக்க தேரர்.

★ வண. பண்டிற் மாதம்பகம அஸாஜி தேரர்.

★ வண. கலாநிதி பலிகந்த ரட்ணசார தேரர்.

★ வண. பலப்பிட்டிய ரட்ணசிறி தேரர்.

★ வண. இதிகாகதுவே சுத்தா தேரர்.

★ வண. விஜயபுர மகாநாம தேரர்.

★ வண. ரத்பாமா கநிவ தேரர்

★ வண. ரத்கம திலகசிறி தேரர்.

★ வண. கிதுல்வல அசாஜி தேரர்.

★ வண. மோர்காலி விமல தேரர்.

இவர்களுடன் மகாநாயக்கரின் செயலாளர்களான ஹேமான் தவிபுசான சித்துகே, வவிமுனி ஜெபரட்ண டி சில்வா ஆகியோரும் வந்துள்ளனர். (இ-3)

## திருச்சி, வாழவந்தான் முகாமில் ஈழ அகதிகள் 15 பேர் வாந்திபேதியால் மரணம்

திருச்சி, வாழவந்தான் முகாமில் தங்கியுள்ள ஈழ அகதிகளில் 15 பேர் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டு மரணமாகியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

534 ஈழ அகதிக் குடும்பங்கள் தங்கியிருக்கும் இந்த முகாமில் போதியளவு வைத்திய வசதிகள் இல்லாதாலேயே மேற்படி அவச்சாவுகள் ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. [ஒ-3]

## புலிகளைத் தடைசெய்வது குறித்து இந்திய அதிகாரிகள் கருத்துவேறுபாடு

### பிரதமர் நியமித்த விசேட குழு திண்டாடுகிறது

புதுடில்லி, ஏப். 23

தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்வதா இல்லையா என்பது குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட விசேட உயர்மட்டக் குழு எந்த முடிவுக்கும் வர முடியாமல் திண்டாடுவதாக [illegible] புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சுச் செயலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இந்த உயர் குழு மூன்று தடவைகள் கூடி ஆராய்ந்த போதிலும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து விசேட குழுவின் அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடு நிலவுவதாலேயே முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரம் வருமாறு:-

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித மீட்டல் வகுப்பு O/L
கலை, வர்த்தக கல்லூரி
C.C.A
வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

DAY CLASS O/L - 1992

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா செல்லவடிவேல் |
| கணிதம் | — | திரு பூரா அருள்செல்வம் |
| சமூகக்கல்வி | — | திரு. கணேஸ் |
| தமிழ் | — | பண்டிதர் |
| சமயம் | — | திருமதி குமரன் |
| ஆங்கிலம் | — | திரு. T. லிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. விக்கி |

ஆரம்பம்: 23 - 04 - 1992
காலை 8-00 மணி

குறிப்பு: மாணவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப பாடங்களை தெரிவு செய்யலாம். வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.
[சி-2207]



DAY CLASS
O/L - 1992
துரித மீட்டல்
வினா - விடை வகுப்புகள்
9 — 3 மணி வரை
ஆரம்பம்: 23 - 04 - 92
(இன்று)

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. ஜெயக்குமார், |
| | | திரு. பேரின்பநாதன் |
| விஞ்ஞானம் | — | திரு சதீஸ் |
| | | திரு. கரன் |
| தமிழ் | — | திரு. திருஞானம் |
| | | செல்வி பேரின்பநாயகி |
| சமூகக்கல்வி | — | திரு. வில்சன் |
| ஆங்கிலம் | — | திரு இராஜநாதன் நைல்ஸ் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |

செலின் கல்வி நிறுவனம்,
கோப்பாய்.

குறிப்பு: மாதாந்த பரீட்சைகளும் இலவசக் கருத்தரங்கு வகுப்புகளும் நடத்தப்படும்.
(20677)



யாழ். ஆயர் மேதகு
வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை
அவர்களின்
வெள்ளி, பொன், பவள
விழாக்களைச் சிறப்பிக்கும் முகமாக
திருமறைக் கலாமன்றம்
எடுக்கும்
முத்தமிழ் விழா
1992 ஏப்ரல் 24, 25, 26
(வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்)
★ உரையரங்கு
★ கவியரங்கு
★ இசையரங்கு
★ வழக்காடு மன்றம்
★ நடன நாடகம்
★ மெல்லிசை
★ நாடகம்
போன்ற பல்சுவை நிகழ்ச்சிகளில் வித்தகர்கள் கலந்து கொள்கின்றார்கள்
தினமும் மாலை 5 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
இடம்: மன்ற அரங்கு,
238, பிரதான வீதி, யாழ்.
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
பிரவேசம் இலவசம்.
(சி 1942)


# ஐ நா. செயலாளர் இந்தியாவில்

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரோஸ் காலி நேற்று முன்தினம் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

புதுடில்லியில் 3 நாட்கள் தங்கியிருக்கும் அவர், இந்தியத் தலைவர்களுடன் சர்வதேச விவகாரங்கள் பற்றி கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-க]

# வடக்கின் சிறந்த இலங்கை வங்கிக் கிளை

வடமாகாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் 1990 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிளையாக நெல்லியடிக் கிளை இலங்கை வங்கியின் தலைமையகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சிறந்த கிளையாக மானிப்பாய்க் கிளை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் வடமாகாணத்தின் சிறந்த கிளையாக மானிப்பாய் கிளை தேர்ந்தெடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# விஞ்ஞான வகுப்புகள்

தென்மராட்சி, ஏப். 23

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இவ்வாண்டு முதல் புதிய உயர்தர விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [ஒ-117]

## புலிகளைத் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் நரசிம்மராவினால் நியமிக்கப்பட்ட இந்த விசேட குழுவில் வெளியுறவு அமைச்சு, உள்துறை அமைச்சு, சட்டத்துறை அமைச்சுச் செயலாளர்களோடு புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையின் புவியியல்-அரசியல் நிலைமை, இந்தியாவின் நீண்ட கால நலன்கள் ஆகியவற்றை மையமாக வைத்தே தடை செய்வதன் சாதக பாதக விளைவுகள் குறித்து ஆராயப்படுவதாக அறியப்படுகிறது.

தொலை நோக்கு அடிப்படையில் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது எதிர்மறையான பலன்களையே தருமென்று சட்ட அமைச்சும், வெளியுறவு அமைச்சும் கருதுகின்றன.

பல நாடுகளில் இயங்கும் தீவிரவாத இயக்கம் ஒன்றை தடை செய்ய வேண்டுமானால் இந்தியாவின் பயங்கரவாதச் சட்டத்தை திருத்த வேண்டும் என்று சட்ட அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வதை விட அவர்களின் நடவடிக்கைகளை தடை செய்து விடலாம் என்று உயரதிகாரிகளின் ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

இலங்கை அரசே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தயாராகும் போது இந்திய அரசு தடை செய்வது பொருத்தமாக இருக்குமா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்படும் தடையால் தமிழகத்தில் ஆளுங்கட்சி தன்னுடைய அரசியல் எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்தும் வாய்ப்பும் உள்ளது என்று உள்துறை அமைச்சு அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை தடை செய்வதால் கிடைக்கும் பலன்களையும், ஏற்படக்கூடிய நஷ்டங்களையும், கணக்கிட்டுப் பார்த்தால் நஷ்டங்கள் தான் அதிகமாக இருக்கும் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ-3)

# காணிக்குள் ஆடு வந்தால் எமக்கு கோபம் வருகிறது!

## 'ஆமி' வந்தால் மட்டும்...?

கொக்குவில், ஏப். 23

''எமது காணிக்குள் ஆடு வந்தால் எமக்கு கோபம் வருகிறது. எமது நாட்டினுள் ''ஆமி'' வந்தால் ஏன் கோபம் வருவதில்லை? இரும்பைத் தூக்கக் கூடியவர்கள் இரும்பைத் தூக்கி, துரும்பைத் தூக்கக் கூடியவர்கள் துரும்பைத் தூக்கி போரிட வேண்டும்''.

லெப். கேர்ணல் கிரேஸியின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி மற்றும் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி தொடர்பாக கோண்டாவில் அகிலேஸ்வரன் வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பல பொறுப்பான வேலைகளை சிறப்பாகச் செய்தவர் கிரேஸி. 1987 இல் நெல்லியடியில் இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலிலும் இவரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் யாழ் பல்கலைக்கழக மைதானத்துக்குள் இறங்கியபோது, அவர்களை எதிர்கொண்டு அழித்து நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியதில் முன்னின்றவரும் இவரே.

கடாபி மாஸ்டர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

வலிகாமம் கலை, பண்பாட்டுக் குழுவினர் தயாரித்து வழங்கிய அன்னை பூபதி நடன நாடகமும், தென்மராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் ''உரிமைத் தேர்'' என்ற குறியீட்டு நாடகமும் இடம்பெற்றன.

[இ-69]


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ்ப்பாணம், மருதனார்மடம்.
கோட்டங்களுக்கான
விசேட பொதுக் கூட்டம்

யாழ் கோட்டம்
இடம்: விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ் கோட்ட செயலகம், நல்லூர் கோவில் முன்பாக
காலம்: 24 04-1992 வெள்ளி பிற்பகல் 3மணி

மருதனார்மடக் கோட்டம்
இடம்: விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க மருதனார் மட கோட்டச் செயலகம், உரும்பராய்
காலம்: 24 04 1992 வெள்ளி காலை 10 மணி

மே தின ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதற்கான சகல இயக்குனர்களும், ஆசிரியர்களும் தவறாது சமுகம் தரவும்.

- பொதுச் செயலாளர்.
[20680]



வெளிவந்து விட்டது!
ஆண்டு — 7 சமூகக்கல்வி
துரித மீட்டலுக்கான வினா - விடை
ஆக்கம்: சந்திரசேகரம்
ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம்
விலை: ரூபா 20/- மட்டுமே
[சி-1941]



உயர்கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி.
G. A. Q. 92/93 (பேராதனை)
விரிவுரைகள் (புதிய பிரிவு)
ஆரம்பம்: 26-4-92 காலை 11- 0 மணி.
மு.குறிப்பு:
★ G. A. Q. இங்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
★ எமது கல்லூரியில் பதிவு செய்த மாணவர்களும், புதிய மாணவர்களும் சமுகம் அளிக்கவும்.
[சி/2220]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இனப்பிரச்சினை:

# மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட சுவீடன் தயார்

## அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

ஜெனிவா, ஏப். 23

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விரும்பினால், மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடுவதற்கு சுவீடிஷ் அரசு தயாராக இருப்பதாக, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் செல்வி மார்கரதா அஃப் அக்லாஸ் தெரிவித்திருக்கின்றார்.

பேராசிரியர் பீட்டர் ஷோக் எழுதிய கடிதம் ஒன்றுக்கு, அண்மையில் அமைச்சர் அக்லாஸ் பதில் கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தில் தனது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அவர் மிகவும் தெளிவாக விவரித்துள்ளார்.

சுவீடிஷ் உப்சால் பல்கலைக்கழகப் பேராசிரியர் பீட்டர் ஷோக், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து அரசுடனும் வடக்கே சென்று விடுதலைப் புலிகள் தலைவர்களுடனும் பேச்சுகள் நடத்திவிட்டுச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவீடிஷ் வெளியுறவு அமைச்சரின் சார்பில் செல்வி ஈவா ஹெக்ஷெர், பேராசிரியர் ஷோகிற்கு எழுதிய அப்பதிலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இலங்கையில் உள்ள நிலைவரங்கள் தொடர்பாக நீங்கள் எழுதிய இரண்டு கடிதங்களுக்கும் பதில் அனுப்புமாறு வெளியுறவு அமைச்சர் என்னைப் பணித்திருக்கின்றார்.—

இலங்கையில் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இரு தரப்பினருடனும் சமாதான உடன்பாடு ஒன்றைக் காண்பதற்கான முயற்சியில் தீவிர பங்கொன்றை ஆற்றுவது குறித்து சுவீடன் பரிசீலிப்பதை சாத்தியமாக்கும் முகமாக, அத்தகைய சமாதான முயற்சி ஒன்றில் ஈடுபடுமாறு இரு தரப்பினரும் சுவீடிஷ் அரசை வெளிப்படையாகக் கேட்க வேண்டும் என்று அவர் உங்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறார்— என்றுள்ளது.

[ஒ-3]

# நகரைக் கலக்கிய பை!

கொழும்பு, ஏப். 23

கடந்த திங்கள் பகல் கொழும்பு — பஞ்சிகாவத்தை ஆமர் வீதி அருகே கவனிப்பாரற்றுக் கிடந்த பை ஒன்று பரபரப்பை ஏற்படுத்தியது.

கட்டடம் ஒன்றின் வெளிப்புறத்தில் காணப்பட்ட அந்த பையினுள் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தைத் தொடர்ந்து பொலீஸார், அப் பகுதியில் பாதசாரிகள் போக்குவரத்துச் செய்வதையும், வாகனங்கள் நடமாட்டத்தையும் உடனடியாகத் தடை செய்தனர்.

இராணுவத்தில் உள்ள குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு அந்த இடத்துக்கு விரைந்து சென்று நடவடிக்கையில் ஈடுபட்டது. இறுதியில் அப் பையினுள் துணிகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

[ஒ-எ]

## தெற்கில் கடும் வரட்சி

கொழும்பு, ஏப். 23

தென் பகுதியில் வரட்சியின் காரணமாக 70 ஆயிரத்து 342 ஹெக்டயர் வயல் நிலம் தரிசு நிலமாக மாறியுள்ளது தென் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் 27 ஆயிரத்து 750 ஹெக்டயர் நிலமும், மாத்தறை மாவட்டத்தில் 20 ஆயிரத்து 562 ஹெக்டயர் நிலமும், அம்பாந்தோட்டையில் 28 ஆயிரத்து 50 ஹெக்டயர் நிலமும் சாகுபடி இன்றி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

[ஒ-த]

## மீன்பிடிக்க தடைவிதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

மட்டக்களப்பு ஆரையம்பதி வாவியிலும் மற்றும் பகுதிகளிலும் தமிழர்கள் மீன் பிடிப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

இராணுவத்திற்குப் பயந்து மறைவாக மீன் பிடிப்பவர்களும் சுட்டுக் கொல்லப்படுகின்றனராம். இதனால் தொழில் இழந்திருக்கும் மீனவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-த]

## சோரன்பற்றில் போஷாக்கு உணவு

தென்மராட்சி, ஏப். 23

சோரன்பற்றுப் பகுதியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் ஆகியோருக்கு கிளிநொச்சி மாவட்ட சர்வோதய அமைப்பினர் போஷாக்கு உணவை நேற்று முதல வழங்கி வருகின்றனர்.

போஷாக்கு உணவு தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் ஏற்கனவே பளை இந்திராபுரத்தில் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

[ஒ-117]

# விமானம் மூலம் அகதிகள் திருமலை வருவதில் தாமதம்

கொழும்பு, ஏப். 23

ஈழத் தமிழ் அகதிகளை விமான மூலம் திருகோணமலைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த திட்டம் கை கூடவில்லை. இதனால் நேற்று முன்தினம் இங்கு அழைத்து வரப்பட இருந்த அகதிகள் வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சீனக்குடா விமான நிலைய தளத்தில் இந்திய விமானம் தரை இறங்க பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து, இந்திய அதிகாரிகள் இலங்கை வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்ததே தாமதத்துக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இவ் விடயத்தை பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கும் சமர்ப்பித்துள்ளது. பாதுகாப்புச்சபை இது குறித்த முடிவை விரைவில் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகதிகளை தாயகம் ஏற்றி வரும் ஏ.சி. அக்பர் கப்பல் பழுதடைந்ததால் விமான மார்க்கமாக அவர்களை அழைத்து வருவதெனவும், நேற்று முன்தினம் அந்த நடவடிக்கையை ஆரம்பிப்பதெனவும் முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை —

600 இலங்கைத் தமிழ் அகதிகளுடன் ராமானுஜம் கப்பல் இன்று தலைமன்னார் இறங்குதுறை வந்தடையும் என்று அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 25 ஆம், 29 ஆம் திகதிகளிலும் ராமானுஜம் மூலம் அகதிகள் தாயகம் திரும்ப உள்ளனர்.

[ஒ-த]

## தங்க கடத்தல் மும்முரம்

கொழும்பு, ஏப் 23

இலங்கைக்குள் தங்கம் கடத்தி வரப்படுவது என்றுமில்லாத வகையில் அதிகரித்திருப்பதாக சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டில் 11 கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான 212 5 கிலோ தங்கம் நாட்டினுள் கடத்த முயற்சிக்கப்படுகையில் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]


# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் புலேந்திரன் தஜீவன்

புலேந்திரன் - ஜெயராணி தம்பதிகளின்

★ செல்வப் புதல்வன் தஜீவன் ★

இன்று 23-04-1992 இல் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாக கொழும்பில் கொண்டாடுகின்றார். இவரை சுவிஸில் இருக்கும் அப்பா, பெரியப்பாமார், மாமாமார், மாமி, மச்சான், மச்சாள், கனடாவில் இருக்கும் தனபாலன் மாமா, குமுதினி மாமி, டோறிஷா மச்சாள் ரவிச்சித்தப்பா மற்றும் கொக்குவில் மேற்கு பூநாறி லேனில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், மாமிமார், பூட்டி மற்றும் வண். மேற்கில் இருக்கும் அம்மா, அம்மப்பா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று, பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக காமாஷி அம்பாள் அருளோடு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

'துவாரகை',
பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு.

[20664]



புதிய உயர் கல்லூரி
(New College of High Studies)

O/L
DAY CLASSES

ஆரம்பம்:
28-04-1992
[8 மணி]

O/L
(Sat. — Sun)

புதிய பிரிவு:
ஆரம்பம்:
25-04-1992
[காலை 6 மணி]

[சி-1896]



தென் இந்திய திருச்சபை
யாழ். ஆதீனம்

விதவைகளுக்கான
சுய வேலைவாய்ப்புத் திட்டம்

மேற்படி திட்டத்தின் இரண்டாவது பிரிவுப் பயிற்சி நெறி வகுப்புகள் மிக விரைவில் ஆரம்பமாக உள்ளன. இப்பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்பும் குடும்பத் தலைவரை இழந்த பெண்கள், உங்கள் பெயர்களை ஆதீனக் காரியாலயத்தில் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்து கொள்ளவும்.

இப் பயிற்சி நெறி வகுப்புகள் 6 மாத காலத்திற்கு பின்வரும் துறைகளில் நடைபெறும்.

1. தையற் பயிற்சி
2. கோழி வளர்ப்புப் பயிற்சி
3. கால் நடை வளர்ப்புப் பயிற்சி
4. தட்டச்சுப் பயிற்சி

பயிற்சியின் முடிவில் சுயதொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவிகளும் சான்றிதழும் வழங்கப்படும்.

— திட்டப்பொறுப்பாளர்.

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

[சி-2218]



# 1 ஆம் வருட நினைவலைகள்

உதயம்: 1974 — 07 — 29



அஸ்தமனம்: 1991 — 04 — 23

## செல்வன் சிவரூபன் சிவசுப்பிரமணியம்

பன்னிரண்டு திங்கள் பறந்தோடி விட்டாலும்
பழைய நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
கல கலப்பான பேச்சும், உன் வதனமும்
எம் மனக்கண்ணில் நின்று நிழலாடுகின்றன.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்பு அம்மா, அம்மம்மா,
அக்காமார், தம்பி,
உற்றார். உறவினர்,
நண்பர்கள்.

துன்னாலை மேற்கு.
கரவெட்டி.

[20649]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஹுமாலா லேடீஸ் சைக்கிளும் பாவனையிலுள்ள ஆண்களுக்கான ஏசியா சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. 15, சென் பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[20667]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. மேசை, கதிரை, கட்டில், சாப்பாட்டு மேசை, குசன் செற்றி முதலியன. தொடர்பு கொள்ளவும். 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [20675]

### விற்பனையாகின்றன

கடந்த கால O/L, A/L வினா - விடைகள் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/2203]

### இலவச திருமண சேவை

31 வயது, சதயம் 4, வைத்தியப் பகுதி உத்தியோகத்தருக்கு சைவ மணாளன் தேவை. விண்ணப்பிக்கவும்: நேரடிச் சந்திப்பு ஞாயிறு காலையில், து. விமலா, யாழ், நாச்சிமார் கோவிலடி.
(4680)

32 வயது, ரேவதி 2, செவ்வாய் 7, A/L, ஐசிங் வகுப்பு நடத்துனருக்கு மணாளன் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4679]

### திருமண சேவை

''மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள் தகவல்கள் பரிவர்த்தனை நிலையம்'' தரகு நோக்கற்ற திருமண சேவையை ஆரம்பித்துள்ளது. மன இசைவான துணையைப் பெற திருமணத்தை எதிர்கொள்வோரது ஜாதகங்கள், தகவல்களை பதியலாம், வளமான இவ்வாழ்வின் வழிகாட்டி நிறுவனம், 03, யாழ் வீதி, சிறாம்பியடி, யாழ்பபாணம், (ஆரியகுளம் சந்திக்குஅண்மையில்] [4690]

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
[சி/1888]

### தவறிவிட்டது

இல. 30, 2ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள திருமதி ஜெ. நாகராசா (நா. ஜெயதேவி] என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. நேரில் அல்லது தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.
(சி/2216)

20-04-92 நண்பகல் எழிலகத்திற்கும், வெலிங்டன் சந்திக்கும் இடையில் வவுனியா பிரயாண பாஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமசிவாயம்- தில்லைவாசன், யாமாசந்தி. மானிப்பாய் என்ற விலாசத்திற்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கவும்.
[20676]

---

# A/L 94

## விலங்கியல்

பிரிவு II

ஆரம்பம்: 25-04 1992
காலை 7-00

ஆசிரியர்:

## ப. நாகநாதன்

பிரிவு I
நடைபெறுகின்றது.
[காலை 9-00 — 10-00 மணி]

**New Master Institute,**
B.M.C Lane, Jaffna.
[சி/2213]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 14 — 12 — 1915



மறைவு: 25 — 03 — 1992

அமரர்

## டாக்டர் சின்னத்தம்பி செல்வராசா

எங்கள் குடும்பத் தலைவரான அமரர் டாக்டர் சின்னத்தம்பி செல்வராசா அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிரியைகள் நாளை [24 - 04 - 1992] வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் எம் இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், அன்னார் மருத்துவமனையில் நோயுற்றிருந்த வேளை, சகல ஒத்துழைப்பும் வழங்கிய மருத்துவ மனை டாக்டர்கள், தாதிமார்கள், அனைத்து ஊழியர்களுக்கும், அன்பர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து பல்வேறு வகையிலும், உதவிகள் புரிந்தும், கண்ணீர் அஞ்சலி, அனுதாபச் செய்திகள் வழங்கிய உற்றார், உறவினர், அன்பர்கள், அயலவர்கள், அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்னாரின் நினைவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 16, பழம்றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[20665]

---

# ★ திருமண அழைப்பு ★

**மணமகன்:** சடாச்சர சர்மா பத்மநாதன்
**மணமகள்:** சோம சர்மா ஜெயவர்த்தனி
[முதலியார் சோமசுந்தர ஐயரின் பௌத்திரி, புன்னாலைக்கட்டுவன்]

இடம்: ஆவரங்கால் (சிவன் கோவிலடி)

காலம்: சித்திரை மாதம் 12 ஆம் நாள் (24 — 04 — 1992) வெள்ளிக்கிழமை காலை 8-23 மணி முதல் 9-11 மணி வரை.

★ உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

பிரம்மஸ்ரீ
ம. சடாச்சர சர்மா தம்பதிகள்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

பிரம்மஸ்ரீ
அண்ணாச்சாமி ஐயர் தம்பதிகள்,
(பெரிய தகப்பனார்)
''சோதாவதி''
ஆவரங்கால்.

[இரு வீட்டார் அழைப்பு]
[[illegible]]

---

# அறிவித்தல்

**யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி,**
**யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவ, மாணவியர் தங்கள் சுட்டெண்களை அறிவதற்காக 24 - 4 - 1992 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக் காரியாலயத்துக்குச் சமுகம் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

— அதிபர்கள்.

[சி/1940]

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி நந்தினி சுந்தரலிங்கம்

[விஞ்ஞான, கணித ஆசிரியை,
வட இந்து மகளிர் கல்லூரி]

தோற்றம்: 17—10—1952
இறையுடன் கலப்பு: 23—04—1987

ஊற்றெடுக்கும் எம் கண்ணீரோ
என்றென்றும் வற்றாது;
எம்மிதய தேவதையே!
ஏழு ஜென்மம் மாறினாலும்
எம் இதயக் கன்றல் ஆறாது;
ஐங்கரனின் துணையாலே வேண்டுகிறோம்-
மனச்சாந்தி!

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
Dr. பொ. பஞ்சநாதன் குடும்பத்தினர்.

'துவாரகை',
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
[சி-1936]

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லத்துரை வரதலிங்கம்

[இளைப்பாறிய அதிபர் - யாழ்/ வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்; தீவுப்பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி; தீவுப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளர்]

மலர்வு: 25—09—1929
உதிர்வு: 12—05—1990

திதி: 19-4-1992

எங்கள் குடும்பத் தலைவர் எதிர்பாராத வேளையில் பிரிந்து, ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவே எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

- உங்கள் குடும்பத்தினர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
[20672]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இனி எதை விரும்பும்?

கடற்போர் வல்லமையிலும் விடுதலைப் புலிகளின் திறன் நிகரற்றது இலங்கை-இந்திய கடற்படைகள் தமக்கிடையே ஒத்துழைத்தும், இணைந்து செயற்பட்டும் கூட விடுதலைப் புலிகளின் வழமையான கடற்போக்குவரத்தைத் தடுக்க முடியவில்லை.

இவ்வாறு பி.பி.சி. விமர்சகர் தெரிவித்திருக்கிறார்.

1990 ஜூனில் போர் ஆரம்பமாகு முன்னரும் சரி, பின்னரும் சரி விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்தைத் தடுப்பதன் மூலம் அவர்களுக்கான ஆயுத சப்ளையையும், ஏனைய வளங்களையும் துண்டித்துவிட வேண்டும் என்று இலங்கைக் கடற்படையினர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

எனினும் அவர்களால் தாம் நினைத்ததைச் செய்ய முடியவில்லை நவீன ஆயுதங்கள் நிறைந்த வசதிகள் புதிய தந்திரோபாயங்கள் என்று எல்லாவற்றையும் முறியடித்து புலிகள் தமது வழமையான கடற்போக்குவரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைக் கடற்படை மீது பலத்த தாக்குதல்களையும் நடத்தி வருகிறார்கள்.

இலங்கைச் சரித்திரத்தில் வெளிநாட்டார் ஆக்கிரமிப்புகள் கடல் வழி மூலமே ஆரம்பமாகின. எனவே மண்ணைக் காப்பது, மீட்பது எவ்வளவு அவசியமோ அதே போல கடலும், கடல் வளமும் பாதுகாக்கப்பட வேண்டியது, மீட்கப்பட வேண்டியது அத்தியாவசியம்.

இதனை மிகத் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்தே தலைவர் பிரபாகரன் கடற்புலிகளை உருவாக்கினார் அதனால் தரைப் போர் திறனில் போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது போல, கடற்போர் திறனிலும் கடற் புலிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

இங்கும் கூட, பயிற்சியும் ஆயுதங்களும் மட்டும் புலிகளின் திறமைக்கும் வெற்றிக்கும் காரணிகள் அல்ல. பெரும் வளங்களும் ஆயுத வசதிகளும் கொண்ட இரண்டு நாடுகளின் இராட்சத கடற்படைகளை எதிர்கொள்வதற்கு, போராளிகளின் மன உறுதியும் இலட்சியப் பற்றுமே மூல காரணங்கள்.

விடுதலைப்புலிகள் போராளிகள் களத்தில் இலட்சிய வேட்கையுடன், உக்கிரமாகப் போராடுகிறார்கள். அதனால் அவர்கள் எதிரிகளின் மதிப்பையும் பெற்றுள்ளனர். விடுதலைப் புலிகளை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினமானது என்று இலங்கை இராணுவ உயர் அதிகாரிகள் கூறுவதை பி.பி.சி. விமர்சகரின் மதிப்பீடு ஊர்ஜிதம் செய்கிறது!

தரையிலும் சரி, கடலிலும் சரி விடுதலைப் புலிகள் மன உறுதியுடன் போராடுபவர்கள் என்று தெரிந்த பின்னரும், அவர்களை வெல்வது கஷ்டம் என்று அறிந்த பின்னரும், ஸ்ரீலங்கா அரசு தான் இராணுவ மேலாதிக்க நிலையை எய்தி, தமிழர்கள் மீது தீர்வைத் திணிக்க நினைப்பது விழலுக்கு இறைத்த நீராகவே முடியும்.

இனியாவது அரசு தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் வழியை நாடுமா? இல்லையேல் இரட்டை வேடம் போட்டுத் தற்கொலை செய்ய விரும்புமா?

# அரசு யுத்தத்தை பயன்படுத்தி பதவியைக் காத்து வருகிறது

## 'ஹெல உறுமய' கூட்டத்தில் பேச்சு

கொழும்பு, ஏப். 23

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கம் தயாராக இல்லை. யுத்த மோதல் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசாங்கம் தனது உயிரை (பதவிக் காலத்தை) பாதுகாத்து வருவதே அதற்குக் காரணமாகும்.

கேகாலை மாவட்ட சுதந்திரக்கட்சி எம்.பி. டாக்டர் ஜகத் பாலசூரியா முன்கண்டவாறு அநுராதபுரசாலையில் நடந்த 'ஹெல உறுமய' அணிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இந்த யுத்தம் காரணமாக சிங்கள இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் எதிர்காலம் பற்றி எவரும் கவனிப்பதாக இல்லை. சிங்கள தேசம் பற்றி கவனிப்பதற்கு யாரும் கிடையாது. தொண்டமானின் காலடியில் சிங்களதேசம் வீழ்ந்து கிடக்கின்றது.

தோட்டங்களைக் கைப்பற்றி தமது இறைமையை மலைநாட்டில் நிறுவ தொண்டமான் முயற்சித்து வருகின்றார்.

தொண்டமானின் அனுமதி இன்றி எவரும் மலை நாட்டில் இன்று நுழைய முடியாதிருக்கின்றது. தமிழர் வாக்குகள் கிடைத்துக் கொண்டிருக்கும் வரை அரசு இது பற்றிக் கவலைப்படப்போவதில்லை. வட பகுதியில் இன்று ஒரு சிங்களக் குடும்பம் கூட இல்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தின் தாயகமாக வட பகுதி இருக்கவில்லை என்றும் டாக்டர் ஜகத் பாலசூரியா சொன்னார்.

கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம்.பி. திரு. எஸ். எல். குணசேகரா பேசுகையில், தொண்டமான் இல்லை என்றால் யூ. என். பி. அரசு இன்று இருக்காது என்று சொன்னார்.

சுதந்திரக்கட்சி எம். பிக்களான டி. எம். ஜயரத்ன, எம். கே. டி. எஸ். குணவர்த்தன, ஹேமகுமார நாணயக்காரா, ஜினதாஸா, நியதபாலா, டிக்ஸன் பெரேரா, ஆனந்த தஸநாயகா, திலக் கருணாரத்னா ஆகியோரும் பேசினர். (ஒ-எ)

## நாடளாவிய ரீதியில்

# தனியார் வங்கிகளின் ஊழியர் மறியல் இயக்கம் நடத்துவர்!

நாடளாவிய பொதுவேலை நிறுத்தம் ஒன்றுக்கு முன்னோடியாக மறியல் இயக்கம் ஒன்றை முதலில் நடத்துவதற்கு எட்டு தனியார் வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்ற இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை இந்த எட்டு தனியார் துறை வங்கிகளின் நிர்வாகங்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கும் பட்சத்திலேயே முன்கண்ட தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

வர்த்தக வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, சார்ட்டர்ட் வங்கி, ஹொங்கொங் - ஷாங்காய் வங்கி, இந்தியன் ஓவர் சீஸ் வங்கி, ஸ்டேட் வாங்க் ஒப் இந்தியா, ஹபீப் வங்கி ஆகியவற்றுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையே இருந்து வந்த கூட்டு உடன்பாடு கடந்த ஆண்டு ஜூலையுடன் காலாவதியாகி விட்டது

அதன் பின்னர் சம்பள உயர்வு கோரிக்கை குறித்து இருதரப்பிற்கும் இடையே பத்துத் தடவைகளுக்குக் கூடுதலாகப் பேச்சுகள் இடம் பெற்றன. அப்பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்தன. அதனைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள இவ்வங்கிகளின் ஊழியர்கள் கடந்த 10 ஆம் திகதி வெளிநடப்புச் செய்தனர். [ஓ-எ]

# பெண்கள் உட்பட 14 தமிழர் வத்தளையில் கைதாகினர்

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வத்தளைப் பொலீஸார் 14 தமிழ் இளைஞர் மற்றும் யுவதிகளை விசாரணைக்கென கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 பெண்களும் அடங்குவர். இவர்கள் யாழ்ப்பாணம். வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணையின் போது தெரிய வந்துள்ளதாம். ஒருவரிடம் இருந்து போலிப்பாஸ்போர்ட் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை —

வத்தளைப் பகுதியிலுள்ள வீடுகளில் தங்க வருவோர் குறித்தும் வீட்டு உரிமையாளர்கள் பொலீஸாருக்குத் தகவல் தர வேண்டும் என்றும் —

சந்தேகத்துக்கிடமான முறையில் அப்பகுதியில் நடமாடுவோர் தொடர்பாகவும் தகவல் தருமாறும் பொலீஸார் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனராம். (ஒ-த)

# விஞ்ஞான மாநாட்டில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் மூன்று நாள் மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக பௌதிக விரிவுரை மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

சங்கத்தலைவரும் உபவேந்தருமான பேராசிரியர் அ. துரைராசா அமர்வுகளுக்குத் தலைமை வகிப்பார்.

இன்றைய நிகழ்ச்சிகளில் ''உணவுகளும் உணவுப் பழக்கங்களும்'' என்பது பற்றிய கருத்தரங்கு நடைபெறும். இக்கருத்தரங்கில் திரு என். நந்தகுமார், டாக்டர் எஸ். விவேகானந்தன், டாக்டர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# பூட்டான் அகதிகள் 400 பேர் நேபாளத்தில் உயிரிழப்பு!

காத்மண்டு, ஏப். 23

நேபாளத்தில் முகாம்களில் தங்கியிருக்கும் பூட்டான் அகதிகளில் சுமார் 400 பேர் வரையானோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாததே இந்த உயிரிழப்புக்களுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அகதிகள் விவகாரம் குறித்து பூட்டான் அரசுடன் தமது அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராளா தெரிவித்துள்ளார்.

நாள் ஒன்றுக்கு சுமார் 200 பேர் வரையான அகதிகள் நேபாளத்துக்குள் வந்து கொண்டிருப்பதாக நேபாள அரசு தெரிவிக்கிறது. [ஒ-10]

# ஆலய விக்கிரக பாதுகாப்புக்கு தமிழ்நாட்டில் தனி பொலீஸ் படை

சென்னை, ஏப் 23

தமிழ் நாட்டில் ஆலயங்களையும், விக்கிரகங்களையும் பாதுகாக்க தனியான பொலீஸ் படை ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டசபையில் இதனைத் தெரிவித்தார்.

ஆலய பாதுகாப்புப் படை 4 ஆயிரம் பேரைக் கொண்டதாக இருக்கும் ஆயிரம் கான்ஸ்டபிள்களும், மூவாயிரம் முன்னாள் படை வீரர்களும், இதில் அடங்குவர்.

ஆலயங்களில் இருந்து விக்கிரகங்கள் மற்றும் ஆபரணங்கள் திருடப்படுவதை தடுப்பதே இந்த படையின் முக்கிய நோக்கமாக இருக்கும். கடமையின் போது இவர்களுக்கு ஆயுதம் வழங்கப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## கலந்துரையாடல்

யாழ் கோட்டக் கல்விப் பிரதேசத்துக் குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

# தமிழீழம் ஒன்று அமைவதே மாவீரர்களின் கனவாகும்

## திறப்பு விழாவில் பேச்சு

வரணி ஏப். 23

மாவீரர்களின் கனவு தமிழ் மக்களுக்கு தனியான தமிழீழம் ஒன்று அமைவதே இந்த மாவீரர் வரிசையில் ரூபி. சதீஸ் இருவரும் தமிழீழ மக்களால் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

மாவீரர்கள் நினைவாக தென்மராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா இவ்வாறு சொன்னார்

அவர் மேலும் அங்கு பேசியதாவது,

இந்த நிலையம் திறந்து வைத்தது மட்டும் நின்றுவிடாது. தமிழீழப் போராளிகளின் வரலாறு பற்றி புத்தகங்கள் இங்கு வைக்கப்பட வேண்டும். இதன் மூலம் எமது மக்கள் போராட்டம் பற்றிய முழு அறிவைப் பெற முடியும் — என்றார்.

நிகழ்ச்சியில் மாவீரர்கள் ரூபி. சதீஸ் ஆகியோரது உருவப்பட திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் விபுலன், எழிலமாறன், இளவேனி, புரட்சி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். [த-170]

# அன்னை பூபதியின் தியாகம் உறுதியான உணர்வைத் தருகிறது

## மாணவர் அவைக் கூட்டத்தில் ஜெயா

திருநெல்வேலி ஏப் 23

அன்னைபூபதி மனப்பூர்வமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்றினார் அவரின் தியாகம், உறுதியான உணர்வைத் தருகிறது.

அன்னைபூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பால் நடத்தப்பட்ட கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி ஜெயா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக [illegible] கைலாசபதி அரங்கில் இக்கூட்டம் நடைபெற்றது

செல்வி ஜெயா மேலும் பேசுகையில் —

உலக வரலாற்றில் எந்த பெண்ணும் இத்தகைய போராட்டத்தை நடத்தவில்லை உலகம் வியக்கும் வண்ணம் ஓர் அகிம்சைப் போராட்டத்தை நடத்தி அன்னை பூபதி மரணத்தை அணைத்துக்கொண்டார். இவரின் மரணம் இந்திய பஞ்சசீலக் கொள்கையாளர்களுக்கு கிடைத்த பெரிய அடியாகும் [illegible] யாழ். [illegible] மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மலரவன் தமது தலைமை உரையின் போது, அகிம்சை வழிப் போராட்டம் மூலம் அன்னை பூபதி எம் நிலையை எடுத்துக் காட்டியவர். இதே போன்று ஏனையவர்களும் அகிம்சை வழிப் போராட்டங்களுக்கும் ஏனையவற்றுக்கும் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் தர வேண்டும் என்றார். தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் புரட்சி உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். (இ-143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்க மறியல் நீடிப்பு

தமிழ்நாட்டில் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரு பெண் உட்பட 19 பேரின் விளக்கமறியல் காலம் ஜூன் 18 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் விசேட நீதிபதி எஸ். எம். சித்திக் இது தொடர்பான உத்தரவை நேற்று பிறப்பித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு உதவியதாகவும் அவர்கள் தங்குவதற்கு இடமளித்ததாகவும் இந்த 19 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பேரம்பலம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா பேரம்பலம் நேற்று அதிகாலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், ஞானேஸ்வரன், குணேஸ்வரன், விமலாதேவி, யோகேஸ்வரன், சர்வேஸ்வரன், விக்னேஸ்வரன், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஆனந்தராசா [நியூ லலிதா நகைமாளிகை- உரிமையாளர்], விக்னேஸ்வரி, வரதலெட்சுமி, நகுலாம்பிகை, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமிகாந்த, அர்ச்சனா, டினேஷ், மதனகாந்த், சுதாஜினி, திலுஸா, கிரிசாத், கீதன், கிரிதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னார் நியூலலிதா, நியூஆனந்தா, ராதிகா [நகை மாளிகைகளின்] உரிமையாளர்களின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [23 04-92] பிற்பகல் 2-30 மணிக்கு வைமன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
பிள்ளைகள்.

வைமன் வீதி,
நல்லூர்.
[20670]

### நவரட்ணம் சுப்பிரமணியம்

[T. V. மணியம்]

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை பூர்வீகமாகவும் கொண்ட நவரட்ணம் சுப்பிரமணியம் [T V. மணியம்] லண்டனில் 07-04-92 இல் மாரடைப்பால் காலமானார். இவர் காலஞ்சென்ற க. நவரத்தினம் [மலாயன் பென்சனர்] தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற K. காங்கேசுவின் மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் [அவுஸ்திரேலியா], வதனி [மலேசியா], வசந்தி [லண்டன்], ரஜனி [கொழும்பு] காலஞ்சென்ற தாரணி, சுகந்தி, தர்சி, ஹப்பி [கொழும்பு], ரமேஸ்குமார் [ஜேர்மனி], உமா, சாந்தி, லக்ஷி [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரன் [மலேசியா], சுகுமார் [லண்டன்], சிவலிங்கம் [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரா, தாரணி, வினோத், துவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மாணிப்பாய். மனைவி, பிள்ளைகள்.
[4691]

### திருமதி பத்மநாதன் சுவர்ணபூபதி

யாழ். நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் சுவர்ணபூபதி 22-4-92 இல் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற துரைப்பத்தரின் மகளும் பத்மநாதனின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. பத்மநாதன்
(கணவர்)

601, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.
[20687]

### நாகேசு பரஞ்சோதி

[முன்னைநாள் குளியாப்பிட்டி வர்த்தகர்]

காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகேசு பரஞ்சோதி 20-4-92 இல் அப்புத்தளையில் காலமானார். அன்னார் காரைநகர் வாரிவளவு காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகேசு, சின்னம்மா தம்பதிகளின் மகனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், சிறிமகேந்திரராசா [பண்டாரவளை], கணேசமூர்த்தி [பேராளி மதி], குருபரன், முகுந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு [வர்த்தகர் கொச்சிக்கடை], சிவசோதி [விநாயகர் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்], ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 21-4-92 அப்புத்தளையில் நடைபெற்றன இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கமால் வீதி,
554 சோனகதெரு,
யாழ்ப்பாணம்.
[20688]

# பிரச்சினைக்குத் தீர்வு காண பல கட்சிகளும் தீவிர முயற்சி

## நாடாளுமன்ற விழாவில் நேற்று பிரேமா

கொழும்பு, ஏப். 23

வடக்கு — கிழக்கு சம்பந்தப்பட்ட மிக முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அரசியல் கட்சிகள் பல்வேறு மட்டங்களில் பணியாற்றி வருகின்றன. இப்பிரச்சினையைத் தீர்க்க, கூடிய விரைவில் அவை கருத்துடன்பாட்டுக்கு வருவது உறுதி.

அரசியல் கட்சிகள் அனைத்தும் பொருத்தமான யோசனைகளை இவ்வாண்டு முடிவதற்கு முன் தெரிவிக்கும் என்று நான் நம்புகின்றேன்.

ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு கூறினார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையில் புதிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டு பூர்த்தியானதை முன்னிட்டு, நேற்றுக் காலை நாடாளுமன்ற வளவில் பிரமுகர்கள் கூட்டம் ஒன்று இடம் பெற்றது. அங்கு பேசும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவைத் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க பேசும் போது கூறியதாவது:-

ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் உள்ள நாடாளுமன்றங்களில் இலங்கை நாடாளுமன்றமே மிகப் பழமை வாய்ந்ததாகும். இது 1835 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1931 ஆம் ஆண்டு வயது வந்த சகலரும் வாக்களித்ததன் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நாடாளுமன்றமும் இதுவாகும்.

இந்தச் சபையில் எமது நாடாளுமன்ற அங்கத்தவர் சிலரின் இரத்தமும் சிந்தப்பட்டது என்பதை மறந்து விட முடியாது — என்று சொன்னார்.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா உரையாற்றும்போது — இந்தக் கட்டடத்தின் எழிலைக் கண்டு அமெரிக்க நிருபர் ஒருவர் ஒருமுறை வாய் மூடி மௌனியானார் — என்றார்.

முன்னாள் சபாநாயகர்கள், தற்போதைய சபாநாயகர், பிரதம மந்திரி, அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் உட்படப் பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். [ஒ-த-எ]

## இன்று

கொழும்புத்துறை, ஏப் 23

யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த குருமார் தூதுக்குழுவைச் சந்திப்பது குறித்துக் கலந்தாலோசிப்பதற்காக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆட்சிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வெ. கெ. தனபாலன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.- [அ-30]

## 300 பேர் பலி!

டாக்கா. ஏப். 23

பங்களாதேஷில் வயிற்றோட்ட நோயினால் இம் மாதத்திற்குள் 300 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல்லாயிரக் கணக்கானோர் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-10]

## அரசு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றியும், விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு பற்றியும் அறிந்துகொள்ள வந்திருக்கும் பௌத்த தூதுவினரின் சமாதான முயற்சியை கலாநிதி பாலசிங்கம் தமது உரையில் பாராட்டிப் பேசியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-3-5]

## விஞ்ஞான...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கே. சித்திரவடிவேலு, டாக்டர் ஆர். எஸ் நவரத்தினம், டாக்டர் கே. சிவபாலன் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பிற்பகல் 3.30 மணிக்கு டாக்டர் எம் கே. முருகானந்தன் ... குறித்து ... [அ-?]

## செஞ்சிலுவை அதிகாரிகள் நாளை பலாலி விஜயம்

யாழ்ப்பாணம், ஏப். 23

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இருவர் நாளை வெள்ளிக்கிழமை சந்திக்கின்றனர்.

இவர்களில் ஒருவர் செல்வி மரிஜோ. இவர் யாழ். அலுவலகத்தில் இருந்து கைதிகளுக்கான சில உதவிப் பொருள்களையும்,, உறவினர்களின் கடிதங்களையும் இங்கிருந்து எடுத்துச் செல்வார்.

மற்றவர் ஏற்கனவே பலாலி வந்து அங்கு தங்கி உள்ளார்.

தமிழ் தெரிந்த இந்த அதிகாரி கொழும்பில் இருந்து விசேடமாக அழைக்கப்பட்டுள்ளார்

கைதிகளின் பிரச்சினைகளை கண்டறிவதற்கு வசதியாகவே தமிழ் தெரிந்த ஓர் அதிகாரியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கொழும்பில் இருந்து வரவழைத்திருந்தது.

தமிழ் தெரிந்த இந்த அதிகாரியின் வருகையில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே பலாலியில் கைதிகளைச் சந்திப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. (இ-3)

## 13 மீனவர்களை இந்தியா விடுவித்தது

கொழும்பு, ஏப். 23

இந்திய அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இலங்கை மீனவர்கள் நேற்று நாடு திரும்பினார்கள்.

இவர்களது விடுதலை தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

மேலும் 16 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-10]

## பௌத்த தூதுக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்நகர் சுபாஸ் விடுதிக்கு அழைத்து வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராஜா, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் அவர்களை வரவேற்றனர்.

பௌத்த தூதுக்குழுவினர் நேற்று மாலை 5-00 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விமான மூலம் நேற்றுக் காலை பலாலி வந்த இவர்கள் பலாலியில் படை அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி இருந்தனர்.

பின்பு மாலை 4 மணியளவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் மூன்று வாகனங்களில் சென்று பௌத்த குழுவினரை அழைத்து வந்தனர்,

சேந்தாங்குளம் சந்தியை இவர்கள் வந்து சேர்ந்ததும் இந்த வாகனங்களுக்கு முன்பும் பின்பும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வழங்கினர்.

சேந்தான்குளம் சந்தியில் இருந்து இளவாலை, சண்டிலிப்பாய், மானிப்பாய் பாதை வழியாக இவர்கள் யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

வீதிகளில் நின்ற மக்களைப் பார்த்து பௌத்த குருமார் கை அசைத்தனர். சில பௌத்த குருமார் வணக்கம் என்று தமிழில் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பல மத ஸ்தாபனங்களும், வெகுஜன அமைப்புகளும் நல்லெண்ணத் தூதுக்குழுவினரை சந்திக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3-15]

## வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான விண்ணப்பப் படிவத்தில் மாற்றம்

வடபகுதிக்கு வெளியே செல்ல அனுமதி கோரும் விண்ணப்பப் படிவம் குடாநாட்டிற்குள் 1—5—92 முதல் மாற்றம் செய்யப்படவுள்ளதால் பழைய விண்ணப்பப் படிவத்தை கைவசம் வைத்திருக்கும் விண்ணப்பதாரிகள் 1—5—92க்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

1—5—92க்குப் பின்னர் குடாநாட்டில் உள்ள அனுமதி வழங்கும் காரியாலயங்களில் பழைய படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதனை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரியப்படுத்துகின்றனர்.

போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு

22 4-92
(20685)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org